திரு. மா. மீனாட்சிசுந்தரம்: தலைவரவர்களே, சென்ற வருஷம் 3 இலட்சம் ரூபாய் மத்திய வங்கி பணம் தந்து, கிட்டத்தட்ட 200 அங்கத்தினர்கள் விவசாயிகளிடமிருந்து புகையிலை கொள்முதல் செய்தது. இந்த அளவிற்குப் பணம் போதவில்லை என்று சொல்கிறார்கள். அமைச்சரவர்கள் அந்தக் கூட்டுறவுச் சங்கத்தில் ''ஓன் பண்ட்ஸ்'' (சொந்தப் பணம்) குறைவாக இருக்கிறது என்று காரணம் சொன்னார்கள். இருந்தாலும் இது புதிய சங்கமாக இருப்பதால் தனியாகக் கவனம் செலுத்தி அதிகப் பணத்தை எப்படியாவது தந்து அந்தப் புகையிலையைக் கொள்முதல் செய்ய முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவரவர்களே, இது புதிய சங்கம் என்ற ஒரே காரணத்திற்காக இருக்கின்ற விதிமுறைகளைத் தளர்த்த முடியாது.

(ஆ) தமிழ் நாட்டிலுள்ள உயர்நிலைப் பள்ளிகளில் 1978-79-ம் ஆண்டு முதல் பதினோராம் வகுப்பு நீக்கப்படுவது குறித்தும் ஆசிரியர்கள் வேலை இழக்கும் அபாயம் குறித்தும்.

திரு. பி. ஈஸ்வர மூர்த்தி என்கிற சொரணம் : தலைவரவர்களே, 41-ஆவது விதியின் கீழ் கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :—

'' தமிழ் நாட்டில் உள்ள உயர்நிலைப்பள்ளிகளில் 1978-79 ஆம் ஆண்டு முதல் பதினோராம் வகுப்பு நீக்கப்படுவதால் பல்லாயிரக்கணக்கான உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்கள் வேலையிழக்கும், அபாயம் குறித்து ''

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, பத்தாண்டுப் பள்ளிப் படிப்பு அடிப்படையிலான புதிய பாடத்திட்டம் தமிழ் நாட்டுப் பள்ளிகளில் 1972-73ஆம் ஆண்டு முதலே படிப்படியாகச் செயல்படுத்தப்பட்டு 1976-77-க்குள் 1 முதல் 10 வகுப்புகளில் அப்பாடத் திட்டம் நடைமுறைக்கு வந்துவிட்டது. தமிழ் நாட்டில் 10—2—3 ஆண்டுப் படிப்பைப் புகுத்தி 1976 நவம்பரில் அரசு ஆணை வெளியிடப்பட்டது. 1977-78 ஆம் ஆண்டு 10ஆம் வகுப்புக்கு வந்துள்ள மாணவர்கள் தாம் 10 ஆண்டுப் பள்ளிப் படிப்பு படித்து வெளிவரும் முதல் தொகுதியினராக இருப்பார்கள். அவர்கள் 1978 ஆம் ஆண்டு மார்ச் திங்களில் 10 ஆண்டு எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு எழுதுவார்கள். அவர்கள் 1978-80-ல் இரண்டாண்டு ஹையர் செகண்டரி படிப்பு படிப்பார்கள்.

2. 1977-78 ஆம் ஆண்டு 11 ஆம் வகுப்பில் உள்ள மாணவர்களும் புதிய பாடத்திட்டத்தின்படி தான் பயில்கின்றனர். அவர்களுக்கு அப்பாடத்திட்டம் முதன் முதலாக 9 ஆம் வகுப்பில் 1975-76 ஆம் ஆண்டு புகுத்தப்பட்டதால் அவர்களுக்கு இடர்ப்பாடு இல்லாமல் இருக்க வேண்டுமெனச் கருதி 9-10 இரு வகுப்புகளில் புதிய பாடத் திட்டத்தின்கீழ் பயில வேண்டுவதை 1975-76, 1976-77, 1977-78 ஆகிய மூன்று ஆண்டுகளில் 9-11 வகுப்புகளில் பயில அனுமதி அளிக்கப்பட்டது. அவர்கள் 1978 ஆம் ஆண்டு மார்ச்சில் 11 ஆண்டு எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு எழுதுவர். அவர்களுக்கு 1978-79 ஆம் ஆண்டு (ஓராண்டு) புதுமுகவகுப்பு நடத்தப்படும். (அவர்கள் தான் கடைசியாக பதினோராண்டு எஸ்.எஸ்.எல்.சி.யும் ஓராண்டு புதுமுக வகுப்பும் பயில்வோராவர்.)

3. தமிழ் நாட்டில் 1976-77 ஆம் ஆண்டு இருந்த மொத்த உயர்நிலைப் பள்ளிகள் எண்ணிக்கை 3,020 அவற்றுள் மைய அரசின் செகண்டரி கல்வி போர்டு உடன் இணைந்த பள்ளிகள், மெட்ரிகுலேஷன் பள்ளிகள் போன்றவை நீங்கலாக மற்ற சாதாரண உயர்நிலைப் பள்ளிகள் 2,874 ஆகும். இந்த 2,874 பள்ளிகளில் பணி செய்து அந்த ஆசிரியர்களின் எண்ணிக்கை 68,497 ஆகும். இவர்களுள் 1978-79 ஆம் ஆண்டு முதல் 11 ஆம் வகுப்பு நீங்குவதால் பாதிக்கப்படுவோர் சுமார் 7,000 பேர் இருக்கலாம்.

4. 10+2+3 ஆண்டு வரம்பில் இரண்டாண்டு ஹையர் செகண்டரி படிப்பைப் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் வைத்துக் கொள்ளலாம் என்று கருதப்படுகிறது. எத்தனைப் பள்ளிகள், எத்தனைக் கல்லூரிகள் என்பது குறித்த இறுதி முடிவை அரசு விரைவில் அறிவிக்கும். ஆண்டு வரம்பு மாற்றத்திற்கு ஆகும் செலவை ஈடுகட்ட மைய அரசுக் கல்வித் துறை எந்த அளவுக்கு நிதி உதவி தரும் என்பது தெளிவாகவில்லை. இறுதி முடிவு எடுக்கும்பொழுது இதுவும் கருத்திற் கொள்ளப்படும். தற்பொழுது 11 ஆம் வகுப்பில் பயிற்சி அளிக்கும் ஆசிரியர்கள் தக்கக் கல்வித் தகுதி உடையோரை ஹையர் செகண்டரி வகுப்புக்கு நியமிப்பது குறித்தும் அரசு ஆலோசிக்கும். மற்றவர்களைப் பொறுத்த வரையிலும் கூட ஆண்டு வரம்பு மாற்றத்தினால் எவரும் பாதிக்காதபடி பள்ளிக் கல்வித்துறை பார்த்துக்கொள்ளும். எந்தெந்த உயர்நிலைப் பள்ளிகளில் ஆசிரியர், மாணவர் விகிதம் இடம் தருகிறதோ அங்கெல்லாம் 11 ஆம் வகுப்பு ஆசிரியர் பதவிகளை 1978-79 ஆம் ஆண்டில் அந்தந்தப் பள்ளியில் 8 முதல் 10 வகுப்புகளுக்கு மாற்றியும், ஆசிரிய மாணவர் விகிதப்படி கூடுதல் ஆசிரியர் பதவிகள் தேவைப்படும் வேறு பள்ளிகளுக்கு மாற்றியும் அந்த 11 ஆம் வகுப்பு ஆசிரியர்கள் 1978-79 முதல் வேலை இழக்காதபடியும் இடர்படாதபடியும் பார்த்துக்கொள்ள பள்ளிக் கல்வித் துறை நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-10)

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: வெளியே எடுக்கப்படுவது எந்தமுறையில் என்பது பற்றி அரசு ஏதாவது கொள்கை வகுத்து உத்திரவிட்டிருக்கிறதா? 11 ஆவது வகுப்பு அமுல் நடத்துவதன் விளைவாக பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் எந்த முறையிலே வெளியே எடுக்கப்படுவார்கள்?'

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அதுபற்றிய விவரமான மான அறிக்கையைத்தான் நான் இப்பொழுது வாசித்தேன்.

(இ) தஞ்சை மாவட்டம், மன்னார்குடி, ஜெயலட்சுமி விலாஸ் நடுத்தரப்பள்ளி நிர்வாகத்தினரின் போக்கு குறித்து.

திரு. மு. அம்பிகாபதி: பேரவைத் தலைவரவர்களே, மாண்பு மிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு,

" தஞ்சை மாவட்டம், மன்னார்குடி நகரத்தில் உள்ள ஜெய லட்சுமி விலாஸ் நடுத்தரப் பள்ளி நிர்வாகம் விரைவில் பள்ளியை மூடவும், மாணவர்களையும், ஆசிரியர்களையும் நீக்கவும், அரசு அதிகாரிகள் உத்திரவை அமுல்படுத்த மறுப்பதும் குறித்த" பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, தஞ்சை மாவட்டம் மன்னார்குடி நகரத்தில் உள்ள ஜெயலட்சுமி விலாஸ் நடுநிலைப்பள்ளி நிர்வாகி, அப்பள்ளியை 1977 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 1 ஆம் நாள் முதல் மூடிவிடுவதாக, அப்பள்ளியில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு 1977 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 29 ஆம் நாள் அன்று அறிவிப்பு ஒன்றினைக் கொடுத்துவிட்டு, கல்வி அலுவலரிடம் பள்ளியை 1977 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 1 ஆம் நாள் முதல் மூடிவிடுவதற்கு அனுமதி கேட்டிருந்தார்.

தமிழ் நாடு தனியார் பள்ளிகள் சட்டம் 1973 பிரிவு 29 விதி 20-ன் படி பள்ளி நிர்வாகி ஆறுமாதங்களுக்கு முன்னரே பள்ளியை மூடுதல் குறித்து அச்சட்டத்தில் குறிப்பிட்டுள்ள கல்வி அதிகாரிக்கு தெரிவித்தல் வேண்டும். மேலும் அந்த அறிவிப்பில் அப்பள்ளி மாணவர்கள் தொடர்ந்து படிப்பதற்கு என்ன மாற்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்தல் வேண்டும்

மேலும், மேற்கூறிய சட்டத்தின்படி பள்ளியை மூடுவதாய் இருந்தால் பள்ளி ஆண்டு முடிந்த பின்னர்தான் மூடுதல் வேண்டும். மேற்சொன்ன பள்ளியை நிர்வாகி 1977 ஆம் ஆண்டு ஜூன்